# மெய்யான ஒளி

அன்புள்ள சகோதர சகோதரிகளே:

**உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.** (யோவான் 1:9)

**உலகத்தில் பல ஒளிகளை நீங்கள் பார்க்கிறீர்கள்.**

***சூரியன் உலகத்திற்கு ஒளியைக் கொடுக்கிறது.***
***சந்திரனும் ஒளியைக் கொடுப்பதுபோல தெரிகிறது.***
***ஆனால் சந்திரன் சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்றுக் கொடுக்கிறது.***

ஒவ்வொன்றிலிருந்து ஒவ்வொரு நன்மைகளை இந்த உலக வாழ்க்கைக்கு நாம் பெறலாம். ஆனால் அனைத்தையும் படைத்த கடவுளின் ஒளிதான், பூரண நன்மையை அளிக்கும்.

*வேதம் சொல்கிறது:*

**பகலும் உம்முடையது, இரவும் உம்முடையது; தேவரீர் ஒளியையும் சூரியனையும் படைத்தீர்.** (சங்கீதம் 74:16)

எந்த மனிதனும் கடவுளின் இந்த மெய்யான ஒளியைப் பற்றிக்கொண்டால், அதிலே வரும் பூரண சமாதானத்தை வேறு எதற்கும் ஒப்பிடமுடியாது.

அப்படிப்பட்ட வாழ்க்கையில்.....இந்த உலகத்தின்.....சூழ்நிலைகள், பாடுகள், ஏக்கங்கள், துன்பங்கள் எதுவும் நம்மை பாதிக்காது.
மாம்சத்தின் இச்சைகள், கண்களின் இச்சைகள், ஜீவனத்தின் பெருமைகள் எதுவும் நம்மை ஆட்கொள்ளாது.
இப்படிப்பட்ட உறவை தேவனோடு ஏற்படுத்திக்கொள்ளத்தான், அந்த காலத்திலே இந்தியாவிலே பலர் காடுகளிலும், மலைகளிலும் வாஞ்சையோடு இறைவனைத் தேடினார்கள் என்று எனக்கு எண்ணத்தோன்றுகிறது.

இன்று மக்கள் அப்படி இறைவனைத் தேடவில்லையென்றாலும்,
அவரவர்கள் எண்ணங்களுக்கு ஏற்ப எப்படியோ ஒரு வழியில்....
இறைவனைத் தேடவும் வணங்கவும் முயற்சிசெய்கிறார்கள்......

*இப்படி நாம் தேடுகிற இறைவன், நம்மை தேடி வந்து சொல்கிறார்...*

**"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.** (யோவான் 8:12)

இந்த கடவுளின் ஒளியே நமக்கு, இம்மைக்கும் மறுமைக்கும் ஒளி கொடுக்க வல்லது.

*வேதம் சொல்கிறது: பரலோக நகரத்திற்கு......*

**நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு.** (வெளிப்படுத்தின விசேஷம் 21:23)

உங்கள் ஆத்துமாவை உயிர்ப்பிக்க வல்லமையான,
இந்த வேதாகம வார்த்தையை தயவுசெய்து மேலும் வாசித்துப் பாருங்கள்.
ஜீவனுள்ள இந்த வார்த்தை உங்களை ஆசீர்வதிக்கும். ஆமென்.

**உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற**
**மெய்யான ஒளி, இயேசுகிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.**